FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவிதொபிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8040860 C

1. District : ஈரோடு மாவட்டம் PS: காவல்நிலையம் லஞ்ச ஒழிப்பு மற்றும் நன்னடத்தை பிரிவு, Year: 2026 ஆண்டு FIR No.: 03/2026 முதஅ. எண் Date: 04.07.2026 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7

(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.07.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16:00 மணி மதல் Time to : நேரம் வரை இரவு 20.40 மணி அளவு

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.07.2026 Time : நேரம் 11:00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் – Time : நேரம் –

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் ½ கி.மீ, கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஈரோடு மாவட்ட குடும்பநல நீதிமன்ற அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : தே.ரா.நாகராஜன். குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : [illegible]. தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 17.08.1983 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் [illegible] (g) Address : முகவரி தேர்தல் பிரிவு, பொன்னம்மாவீதி, ரயில்வே அருகில், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு.டி.சோமலை தெரி, சுகாம. கிள்ளையம் பாளையம், திண்ணை 2வது தெரு, அகதாய் நகர், பெரியார் நகர், ஈரோடு. 2) திரு. ஜெயவேலன்பிள்ளை, தற்போது ஓய்வு பெற்றவர். முன்னாள் Data Entry Operator (தற்காலிகம்) மாவட்ட நீதி, ஈரோடு

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .....காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் தகவல் அறிக்கை குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04.7.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

04/7/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

04.07.2026

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
மாவட்ட மாநில,
புதுக்கோட்டை.

பணிந்தனுப்பப்பட்டது:-

நேற்று (03.07.2026)ம் தேதி வெள்ளிக்கிழமை புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு போலீசாரும் சேர்ந்து 16.00 மணி முதல் இரவு 20.40 மணி வரை புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து, இன்று 04.07.2026ஆம் தேதி ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர், திரு.ராம்குமார், த/பெ கனகு, துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, பொன்னமராவதி தாலுகா அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு புதுக்கோட்டை. அய்யா, புதுக்கோட்டை மாநகராட்சி அலுவலகத்தில் பிறப்பு சான்றிதழ், இறப்பு சான்றிதழ், வீடு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி மற்றும் இதர காரணங்களுக்காக அந்த அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் லஞ்சம் பெறப்படுவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் எனது குழு மற்றும் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குழுவினருடன் இணைந்து நேற்று 03.07.2026ஆம் தேதி மாலை 16.00 மணி முதல் இரவு 20.40 வரை புதுக்கோட்டை நகரில் கிழக்கு மேற்காக செல்லும் ஜெயில் ரோட்டின் வடக்கு பக்கத்தில் தெற்கு பார்த்த வாசலுடன் சுற்றுச்சுவருடன் கூடிய புதுக்கோட்டை மாநாகராட்சி அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திடீர் ஆய்வின் போது மாநாகராட்சி ஆணையர் திரு.காந்திராஜ் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ஏதும் இல்லை, மேலும் அவரது அறையை சோதனை செய்த போது, அங்கும் மதிப்புமிக்க பொருட்களோ, ஆவணங்களோ இல்லை. மேலும் அந்த அறைக்கு முன்னால் நின்று கொண்டிருந்த திருமதி.சத்யா என்பவரை விசாரனை செய்தபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. அந்த அறைக்கு கிழக்கே வடக்கு பார்த்த வாசலுடன் கூடிய பொது நிர்வாக அறையை சோதனை செய்த போது அங்கு இருந்த மேலாளர் திருமதி.காளியம்மாள் என்பவரிடம் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் செல்வி.சங்கரேஸ்வரி முன்னிலையில் விசாரணை செய்த போது, அவர் தன்னிடம் இருந்த ரூ.230/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விளக்கம் கேட்க மேற்படி பணம் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி தொகை ரூ.230/- அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த உதவியாளர் திருமதி.சத்தியாபாமா, இளநிலை உதவியாளர்கள் திருமதி.சாரதாம்மாள் ஆகியோரை விசாரணை செய்ததில், அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் மேற்கண்ட பிரிவு அறையில் சோதனை செய்த போது மதிப்புமிக்க பொருட்களோ, ஆவணங்களோ இல்லை.

மேற்படி அறைக்கு தெற்கு மற்றும் வடக்கு பார்த்த வாசலுடன் கூடிய சுகாதாரப்பிரிவு ஆய்வாளர் அறையை சோதனை செய்த போது, அந்த அறையில் டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டராக பணி செய்யும், தற்காலிக பணியாளர் விஜயலெட்சுமி என்பவரை புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் செல்வி.சங்கரேஸ்வரி முன்னிலையில் சோதனை செய்த போது, Flexify என்று எழுதப்பட்ட கருப்புநிற Travel Bag –ல் முன்பக்கமாக உள்ள பையில் ரூ.4,650/–ம், மற்றொரு பகுதியில் Tcchfire என்று எழுதப்பட்ட மஞ்சள் நிற Tag Bag –ல் ரூ.4,100/–ம், கருப்புநிற பர்சில் ரூ.2,150/–ம் ஆக மொத்தம் ரூ.10,900/– இருந்தது, இதுகுறித்து விசாரணை செய்த போது, மேற்படி பணம் சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். ஆனால் மேற்படி பணம் யாரிடமிருந்து பெறப்பட்டது, அல்லது எப்போது வங்கியிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரங்கள் தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குவதற்கு லஞ்சம் வாங்குவதாக ரகசிய தகவல் கிடைத்ததன்பேரில் இத்திடீர் சோதனை நடத்தப்பட்டது. ஆகவே, சரியான முகாந்திரம் கூறப்படாததால், மேற்படி தொகை ரூ.10,900/– மேற்படி விஜயலெட்சுமி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு, பிரதான நுழைவு வாயிலுக்குக் கிழக்குப்புறமாக வடக்கு பார்த்த வாசலுடன் கூடிய பார்வையாளர்கள் அறையை சோதனை செய்தபோது, அங்கு யாரும் இல்லை. மேலும் அதற்கு கிழக்கே உள்ள தணிக்கை அலுவலர் அறை பூட்டி இருந்தது.

அதற்கும் கிழக்கே மேற்கு பார்த்த வாசலுடன் கூடிய பொறியாளர்கள் அறையை சோதனை செய்தபோது, தொழில்நுட்ப உதவியாளர் விஜய் என்பவரிடம் ரூ.40/–ம், இளநிலை உதவியாளர் பழனிச்சாமி என்பவரிடம் ரூ.1,140/–ம், வரைவாளர் குணசீலன் என்பவரிடம் ரூ.220/–ம், தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர் கார்த்திக்குமார் என்பவரிடம் ரூ.360/–ம், பணி ஆய்வர் அப்துல் ரகுமான் என்பவரிடம் ரூ.17/–ம், திருக்கட்டளை ஊராட்சி செயலர் பாலாஜி என்பவரிடம் ரூ.94/–ம், அலுவலக உதவியாளர் சாதிக் பாட்சா என்பவரிடம் ரூ.145/–ம், தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர் சித்ராதேவி என்பவரிடம் ரூ.60/–ம், தற்காலிக தட்டச்சர் பாண்டிச்செல்வி என்பவரிடம் ரூ.245/–ம் இருந்தது. இது குறித்து அவர்களிடம் விசாரணை செய்தபோது, மேற்படி தொகைகள் தங்களது செலவுக்காக கொண்டு வரப்பட்டது என்று கூறினார்கள். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி நபர்கள் ஆஜர் செய்த தொகைகள் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த அறையிலிருந்த பணி ஆய்வர் பிரியதர்சினி என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் எந்தவிதமான தொகையும் இல்லை. அதன்பிறகு, அந்த அறைக்கு அடுத்து வடக்கே தெற்கு பார்த்த வாசலுடன் கூடிய மாநகராட்சி பொறியாளரின் அறையில் சோதனை செய்தபோது, பொறியாளர் திரு.ரெத்தினவேல் என்பவர் இருந்தார். அவரை விசாரணை செய்தபோது, அவர் ரூ.590/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து

அவரிடம் விசாரணை செய்தபோது, மேற்படி தொகை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி தொகை ரூ.590/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதற்கு அடுத்து இருந்த உதவிப் பொறியாளர்கள் அறைகள் பூட்டப்பட்டு இருந்தது. அதற்கு அடுத்து இருந்த சுகாதார பிரிவு அலுவலர் அறையை சோதனை செய்தபோது, அங்கிருந்த சுகாதார பிரிவு அலுவலர் பாஸ்கரன் என்பவரை சோதனை செய்தபோது, அவர் ரூ.1140/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து அவரிடம் விசாரணை செய்தபோது, மேற்படி தொகை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி தொகை ரூ.1140/– அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கு மேற்கே தெற்கு பார்த்த வாசலுடன் கூடிய பொது சுகாதார பிரிவு அறையை சோதனை செய்தபோது, அந்த அறையில் இருந்த இளநிலை உதவியாளர் அழகுமீனாள், தற்காலிக பணியாளர் கற்பகம், பதிவறை எழுத்தர் பாண்டி டேனியல், தற்காலிக பணியாளர் (தட்டச்சர்) சூர்யா, அலுவலக உதவியாளர் நாகூர் மீரான் ஆகியோரை சோதனை செய்தபோது, அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. மேலும், அந்த அறையில் விலை மதிப்பு மிக்க பொருட்களோ ஆவணங்களோ இல்லை.

அந்த அலுவலகத்தின் முதல் தளத்தில் மாடிப்படிக்கு மேற்காக கிழக்கு பார்த்தவாறு இருந்த நகரமைப்புப் பிரிவு அறையை சோதனை செய்தபோது, அங்கு இருந்த இளநிலை உதவியாளர் திரு.சீனிவாசன் என்பவரிடம் ரூ.550/–ம், நகரமைப்பு இளநிலை பொறியாளர் திரு.சுஜித் என்பவரிடம் ரூ.70/–, பல்நோக்கு பணியாளர் திரு.வேல்முருகன் என்பவரிடம் ரூ.20/–ம், தற்காலிக பணியாளர் (தட்டச்சர்) மகேஸ்வரி என்பவரிடம் ரூ.610/–ம், தற்காலிக பணியாளர் (தட்டச்சர்) பூமாது என்பவரிடமிருந்து ரூ.500/–ம், தற்காலிக பணியாளரான தொழில்நுட்ப உதவியாளர்கள் சரண்யா என்பவரிடம் ரூ.550/–ம், உதயா என்பவரிடம் ரூ.750/–ம் இருந்தது. இது குறித்து அவர்களிடம் விசாரணை செய்தபோது, மேற்படி தொகை தங்களது சொந்த செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார்கள். அவர்களது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த அறையில் இருந்த தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர் வினிதா மற்றும் அலுவலக உதவியாளர் தனலெட்சுமி ஆகியோர்களை விசாரித்தபோது, அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. மேலும், அந்த அறையில் பணமோ விலைமதிப்புமிக்க பொருட்களோ ஆவணங்களோ இல்லை.

மேற்கண்ட அலுவலகத்தின் முதல் தளத்தில் மாடிப்படிக்கு கிழக்கே இருந்த லோக்கல் ஃபண்ட் ஆடிட் அறை பூட்டப்பட்டு இருந்தது. அதற்கும் கிழக்கே வடக்கு பார்த்த வாசலுடன் கூடிய வருவாய் பிரிவு கிளர்க் அறையை சோதனை செய்தபோது, அந்த அறையில் இருந்த இளநிலை உதவியாளர் கோமலாதேவி என்பவரை புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு சருக்கெழுத்து தட்டச்சர் செல்வி.சங்கரேஸ்வரி

முன்னிலையில் விசாரணை செய்தபோது, அவர் தன்னிடம் இருந்து ரூ.780/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து அவரிடம் விசாரணை செய்தபோது, மேற்படி தொகை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது கைபேசியை சோதனை செய்தபோது, கடந்த 19.06.2026ஆம் தேதி மணிவண்ணன் நாராயணசாமி மற்றும் மிதுன் தேவ் ஆகியோர்களிடமிருந்து தலா ரூ.20,000/- கோமலாதேவியின் வங்கி கணக்கிற்கு Gpay அலைபேசி எண்.9944269944 மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து அவரிடம் விசாரணை செய்தபோது, தக்க காரணம் கூறவில்லை. மேற்படி பணப் பரிவர்த்தனை சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது. மேலும், அந்த அறையில் இருந்த பில் கலெக்டர் செல்வி.ரட்சாம்பிகா என்பவரை விசாரித்தபோது, அவரிடம் ரூ.410/- இருந்தது. மேற்படி தொகை தனது சொந்த செலவிற்காக கொண்டு வந்தது என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.410/- அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதன்பிறகு, அங்கிருந்த நித்யா என்பவரை விசாரணை செய்தபோது, அவர் பில் கலெக்டர் செல்வி.ரட்சாம்பிகாவுக்கு உதவியாளராக தற்காலிகமாக பணி செய்து வருவதாக தெரிவித்தார். மேலும், அவர் தன்னிடமிருந்த ரூ.5,570/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து அவரிடம் விசாரித்தபோது, அவர் தனது அலைபேசியில் பதிவு செய்து வைத்திருந்த வரவு செலவு விபரங்களைக் காண்பித்தார். அது சரியாக இருந்ததால், மேற்படி பணம் ரூ.5,570/- அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதற்கு அடுத்து மேற்கு பார்த்த வாசலுடன் இருந்த வருவாய் பிரிவு அறையை சோதனை செய்தபோது, அங்கு யாரும் இல்லை. அதற்கு மேற்கே இருந்த டவுண் சர்வே அறை, மாமன்ற அரங்கம், துணை மேயர் அறை, அதற்கும் மேற்கே அமைந்துள்ள மேயர் அறை, அதற்கும் கிழக்கே உள்ள பிறப்பு இறப்பு பதிவேடுகள் அறை ஆகியவை பூட்டப்பட்டு இருந்தது. அதன்பிறகு, டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.விஜயலெட்சுமி என்பவர் முகாந்திரம் கூறாமல் வைத்திருந்த பணம் ரூ.10,900/- திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாநாகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.கோமலாதேவி என்பவர் தனது வங்கி கணக்கிற்கு Gpay அலைபேசி எண்.9944269944 மூலம் இரண்டு முறை தகுந்த முகாந்திரம் கூறாத பணம் தலா ரூ.20,000/- மொத்தம் ரூ.40,000/- வரவு வைக்கப்பட்டிருந்து. அது சம்மந்தமாக தகுந்த முகாந்திரம் கூறாத திருமதி.கோமலாதேவி என்பவர் மீதும், தகுந்த முகாந்திரம் கூறாத பணம் ரூ.10,900/- வைத்திருந்த மாநகராட்சி டேட்டா எண்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.விஜயலெட்சுமி என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி இந்த புகார் மனுவை மேல் நடவடிக்கைகாக தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். ஒப்பம் (திரு.ராம்குமார், த/பெ

கனகு, துணை வட்டாட்சியர், தேர்தல்பிரிவு, பொன்னமராவதி தாலுகா அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம்.)

Sir Received a complaint at 14.00 hrs on 04.07.2026 and registered a case in Pudukkottai V&AC Cr.No.03/2026 U/s 106 BNSS and 7 of Prevention of Corruption Act as Amended Act-2018 against 1) Tmt.Gomaladevi, Jr.Asst, 2) Tmt.Vijayalakshmi, Data Entry Operator, Pudukkottai City Corporation Office, Pudukkottai District.(S/d J.Jawahar, Inspr, V&AC, PDK Dt.04.07.2026)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்று திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும் ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

04.07.2026
(J.Jawahar)
Inspector of police,
V&AC, Pudukkottai.